# திருப்பூர் மாவட்டத்தில் காலியாக உள்ள இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு

# இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல்!









திருப்பூர் மாவட்டத்தில் காலியாக உள்ள இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு, விண்ணப்பித்திருந்தவர்களை மாநில துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் முன்னிலையில் கழக இளைஞர் அணி செயலாளர்– துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.08.2025) நேர்காணல் செய்தார். மேலும் அவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்து, கொண்டுவந்திருந்த புகைப்படத் தொகுப்பு– மினிட் புத்தகம் ஆகியவற்றை ஆய்வு செய்து, பணி சிறக்க வாழ்த்தினார். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரம் அடங்கிய அறிவிப்பு விரைவில் முரசொலியில் வெளியாகவுள்ளது.

### மாவட்டக் கழகத்தினர் ஒன்றிணைந்து செயல்பட்டு

## சேலம் மத்திய மாவட்டத்தில் உறுப்பினர் சேர்க்கையை விரைவாக முடித்திடுவீர்!

### மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் இரா.இராஜேந்திரன் சிறப்புரை!

சேலம், ஆக. 29-

சேலம் மத்திய மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 27.08.2025 புதன்கிழமை காலை 10.30மணிக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ஜி.கே.சுபாசு தலைமையில் மாவட்டக் கழக அலுவலகமான ”கலைஞர் மாளிகை“ யில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள் வருமாறு:-

தீர்மானம் : 1

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் திருமிகு. மு.க.முத்து அவர்களின் மறைவுக்கு இக்கூட்டம் இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் : 2

50 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரர், எமர்ஜென்சியில் சிறை சென்று சொல்லொனா துயரத்திற்கு ஆட்பட்டு, 2 கோடிக்கும் மேற்பட்ட தொண்டர்களை வழிநடத்தும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களை ஒருமையிலும், மரியாதை குறைவாகவும் பேசி வருகின்ற அடிப்படை அரசியல் அறிவற்ற பழனிச்சாமிக்கு இக்கூட்டம் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது.

தீர்மானம் : 3

சேலம் மத்திய மாவட்டத்தில் ”ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையில் 40% இலக்கை நிர்ணயித்த கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளை சிரம் மேற்கொண்டு, பலமுறை மாவட்டம் முழுவதும் பல்வேறு பணிகளுக்கு இடையில் சுழன்று - சுழன்று, கழகத் தோழர்களையும், முன்னோடி களையும் சந்தித்து வேகப்படுத்தி, உற்சாகப்படுத்தி ஏறத்தாழ எல்லா பூக்களிலும் 50% மேல் உறுப்பினர் சேர்க்கையை விரைவாக முடித்து மாநிலத்தில் முதல் 5மாவட்டங்களில் ஒன்றாக நம் மத்திய மாவட்ட கழகத்தை பெருமைப்பட செய்த மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களின் பணியை பாராட்டுவதுடன், அதற்கு உறுதுணையாக இருந்த கழகத்தின் அனைத்து நிர்வாகிகளையும், BDA, BLA2 மற்றும் BLCகளையும், கழக முன்னோடிகளையும் மாவட்ட கழகம் வெகுவாக பாராட்டுவதுடன் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும் கழகத் தலைவர் மற்றும் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலை மனமார ஏற்று தொடர்ந்து பொதுமக்களை சந்தித்து கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சென்று கழகத் தலைவர் அவர்களின் வெற்றி இலக்கான 200 தொகுதிகளை வென்றெடுத்திட நம் மத்திய மாவட்டத்தில் முழு மனதுடன் பாடுபடுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில் 26.08.2025 அன்று நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ., மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், உதவி ஆட்சியர்(பயிற்சி) தவலேந்து ஆகியோர் முன்னிலையில் பந்தை போட்டு துவக்கி வைத்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர் பாஸ்கர் உள்பட பலர் உள்ளனர்.

### தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர்

## ம.இராசேந்திரன் தலைமையில் சொல் புதிது - 4வது கூட்டம்!

சென்னை, ஆக. 29 -

தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் மேனாள் துணை வேந்தர் ம. இராசேந்திரன் தலைமையில் 26.08.2025 முற்பகல் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகக் கூட்டத்தில் சொல் புதிது-4 கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னைப் பல்கலைத் தமிழ்ப் பேராசிரியர்( ஓய்வு) வ. ஜெயதேவன், தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் (ஓய்வு) மு. இராமசாமி, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் நா. சந்திரசேகரன், சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சா. சரவணன், திறந்தநிலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் (ஓய்வு) பாரதி பாலன், தமிழ் இணையக் கல்விக்கழக முனைவர் அ.ஜேம்ஸ், விவேகானந்தர் கல்லூரிப் பேராசிரியர் ம. இளங்கோவன், அன்னை தெரசா பல்கலைக்கழகப் பேராசிரியர் தி. கமலி , உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் ஆ. மணவழகன், ஊடகத்துறையைச் சேர்ந்த நீரை. மகேந்திரன்,.ராஜ் கண்ணன், மு. முருகேசன் ஆகியோர் பங்களித்தனர்.

இக்கூட்டத்தில் ஏற்கப்பெற்ற சொற்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பெற்றுள்ளது.

வ. எண் ஆங்கிலம் தமிழ் வருமாறு-

1. Angiogram - குருதிநாளப் பதிவு
2- Approver - குற்ற ஏற்பாளர்
3 Bollywood - இந்தித் திரையுலகம்
4 Container/Tanker truck/ lorry - கொள்கலன் உந்து
5 Department of Food Process Engineering- உணவுப் பொருள் பதனீட்டுப் பொறியியல் துறை
6 Department of Food Process Technology - உணவுப் பொருள் பதனீட்டுத் தொழில்நுட்பவியல் துறை
7. Department of Food Safety and Quality Assurance - உணவுப்பொருள் பாதுகாப்பு-தர உறுதிப்பாட்டியல் துறை
8. Department of Food Plant Operations, Incubation and Entrepreneurship - உணவுப் பொருள் ஆலைச் செயற்பாடு, வளர்த்தெடுப்பு -தொழில்முனைவுத் துறை
9. Department of Food Packaging and Storage Technology - உணவுப்பொருள் கட்டகம் - வைப்பகத் தொழில்நுட்பவியல் துறை
10 . Department of Food Business Management - உணவுப் பொருள் வணிக மேலாண்மையியல் துறை
11. Heroism - வீரப்பாடு/ வீரத்தனம்
12 - Hollywood - அமெரிக்கத் திரையுலகம்
13. Kollywood - தமிழ்த் திரையுலகம்
14. OTP - ஒருநேரக் கடவி
15. Parole - காலப்பிணை
16. Passive income - நிழல் வருமானம்
17. Patient - மருத்துவப் பயனாளி
18. Podcast - வலையொலி
19. Premium - உயர்தரம்/ சிறப்பு நிலை
20. Rowdyism - போக்கிலித்தனம்,
21. Smart card - திறன் அட்டை
22. Smart speaker - திறன் ஒலிபெருக்கி
23. Start up - புத்தாக்கம்
24. Stent - செய்நாளம்
25. Stylist - எழிலாக்குநர்
26 - Tatkal - உடனடி
27. Techpreneur - தொழில்நுட்ப முனைவோர்
28. Theme music - உரிப்பொருள்/கருப்பொருள் இசை
29. Theme park - பொருண்மைப் பூங்கா
30. Tips - தூண்டல்
31. Travelpreneur - பயணத் தொழில்முனைவோர்
32. Trending - பேசுபொருள்/போக்குநிலை
33. Trilemma - மும்முனை ஊசலாட்டம்
34 Tubeless tyre - காற்றடை வட்டை
35. Update - புதிதாக்கம்
36. Up-to-date - இற்றை நிலை
37. Valet parking - ஊர்தி நிறுத்த உதவி
38. Vibe coding - உணர்நிலைக் குறியாக்கம்
39. Validity - செல்லுபடி
40. Water bell - குடிநீர் மணி
41. WiFi - அருகலை



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாட்றம்பள்ளி முதல் வெலக்கல்நத்தம் வரை குக்கிராமங்களை இணைக்கும் புதிய வழித்தடத்தில் செல்லும் மினிப் பேருந்தை திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கொடி அசைத்து துவக்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் ஊராட்சிமன்றத் தலைவர்கள் சதிஷ்குமார், சரவணன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சங்கர், ஊராட்சிமன்ற து. தலைவர் சதிஷ்குமார், கிளைக் கழக நிர்வாகிகள் செந்தில்குமார், திருகுமரன், சம்பத், பிரகாசம், நவீன்குமார் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உடன் இருந்தார்கள்.


